இந்துசமய அறநிலையத்துறை

# யானைகள் சிறப்பு நலவாழ்வு முகாம் 2017–18

தேக்கம்பட்டி – மேட்டுப்பாளையம்

மின்னஞ்சல் : elephantcamp@tnhrce.org
தொலைபேசி எண்: 04254–297981

நாள் 15.01.2018

கோவை மாவட்டம், மேட்டுப்பாளையம் வட்டம், தேக்கம்பட்டி அருள்மிகு வனபத்ரகாளியம்மன் திருக்கோயில் அருகிலுள்ள பவானி ஆற்றுப்படுகையில் நடைபெற்று வரும் யானைகள் சிறப்பு நலவாழ்வு முகாமில் இன்று யானைப் பொங்கல் சிறப்பாக கொண்டாடப்பட்டது. முகாமில் அமைந்துள்ள விநாயகர் திருக்கோயில் முன்பாக மண்பானையில் பொங்கல் வைக்கப்பட்டது. இவ்விழாவில் கோவை மண்டல இணை ஆணையர், தலைமையிடத்து இணை ஆணையர், சட்டச்சேர்மம் இணைஆணையர், பண்ணாரி திருக்கோயில் துணை ஆணையர்/ செயல்அலுவலர், தேக்கம்பட்டி திருக்கோயில் உதவிஆணையர்/ செயல்அலுவலர் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள். யானைகளுக்கு சர்க்கரை பொங்கல் மற்றும் கரும்புகள் வழங்கப்பட்டன. யானை பாகன்கள் மற்றும் முகாமில் உள்ள அனைவருக்கும் மதிய உணவில் சர்க்கரை பொங்கல், கூட்டு, பொரியல், அப்பளம் மற்றும் பாயாசத்துடன் கூடிய சிறப்பு மதிய உணவாக வழங்கப்பட்டடது.



இன்றைய தினம் பொங்கல் விழா போட்டிகளின் தொடர்ச்சியாக உறி அடித்தல் போட்டி, கயிறு இழுக்கும் போட்டி, ஓட்டப்பந்தையம் மற்றும் தடை ஓட்ட போட்டி ஆகிய போட்டிகள் நடத்தப்பட்டன. தலைமையிடத்து இணை ஆணையர், சட்டச்சேர்மம் இணைஆணையர் அவர்கள், கோவை மண்டல இணை ஆணையர், பண்ணாரி திருக்கோயில் துணை ஆணையர்/ செயல்அலுவலர், தேக்கம்பட்டி திருக்கோயில் உதவிஆணையர்/ செயல்அலுவலர், வனத்துறை மருத்துவர், கால்நடை உதவி இயக்குநர், வனத்துறை அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது.





யானைகள் வழக்கம்போல் நடைபயிற்சி மேற்கொண்டு பூவாளி குளியல் மேடையில் ஆனந்தமாய் நீராடி கேரட், பீட்ருட் மற்றும் பேரீட்சைபழம் கொடுக்கப்பட்டன. கால்நடை மருத்துவக்குழுவினர் அனைத்து யானைகளையும் தனித்தனியே பரிசோதித்து மருத்துவ ஆலோசனைகள் மற்றும் மருந்துகள் வழங்கினர்.



பசுந்தீவனம், சாத உருண்டைகள், கேழ்வரகு களி, பச்சைப்பயிறு ஆகியவற்றுடன் உடலுக்கு வலுவூட்டும் சத்து மாத்திரைகள் ஆகியவற்றை உட்கொண்ட யானைகள் மாலையிலும் வழக்கம் போல் நடைபயிற்சி செய்து நீராடி தத்தம்  இடங்களுக்குச் சென்று ஓய்வெடுக்கத் தொடங்கின.